இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை - II மட்டம் 3
LWU 1412 – சட்டமுறைமை
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 08.11.2006 நேரம்: மு.ப 11.45 - மு.ப 12.25

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

1. இன்ரலக்ஸியா என்ற நாடு அண்மையில் பொருத்தமான தகைமைகளை கொண்டவர்களுக்கு மாத்திரமே அரசாங்க உத்தியோகம் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையொன்றை உருவாக்கியது. இதற்கமைய இன்ரலக்ஸியா பாராளுமன்றம் புதிய சட்டமொன்றை ஆக்கியது. இச்சட்டம் 'அரச ஊழியர்களுடைய நியமனம் பட்டப்படிப்பு, டிப்ளோமா, அல்லது ஏனைய தகைமைகளின் அடிப்படையில் அமைய வேண்டும்' என ஏற்பாடு செய்து இருந்தது. அமைச்சர் ஒருவருடைய மகன்ஆன திரு..பீன் கடந்த 10 வருடங்களாக வெளிநாட்டில் தொழில் புரிந்து வந்தார். எனினும் அவருக்கு விதிமுறையான கல்விசார் தகைமைகள் இருக்கவில்லை. இவர் அண்மையில் இன்டலக்ஸியாவினுடைய கல்வி அமைச்சின் உயர் பதவி ஒன்றிற்கு நியமிக்கப்பட்டார். இவருடைய நியமனம் பலவருட வெளிநாட்டு அனுபவம் என்ற வகையில் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் புதிய பாராளுமன்ற சட்டத்திற்கு அமைய திரு. பீன் உடைய நியமனம் அமையவில்லை என்ற அடிப்படையில் அவருடைய நியமனத்திற்கு திரு. ஸ்மாட் ஆட்சேபனை தெரிவிக்கிறார்.

   திரு.. ஸ்மாட் தன்னுடைய வாதத்தில் வெற்றி பெறுவார் என நீர் நம்புகிறீரா? பிரயோகத்திலுள்ள பொருள் கோடல் விதிகளின் துணையுடன் உமது விடையை விளக்குக. இலங்கையில் பிரயோகிக்கப்படும் அதே பொருள் கோடல் விதிகள் இன்ரலக்ஸியாவிலும் பயன்படுத்தப்படுகின்றது என கருதுக.

2. 'முந்தீர்ப்பு வழி நிற்றல் கோட்பாடு நீதியை வழங்குவதற்கு அனுசரனை வழங்குகிறது என நம்பப்படுகின்ற போதிலும், நீதமுறை முந்தீர்ப்புக்களால் கட்டுப்படுத்தப்படுவதன் மூலம் நீதியை உத்தரவாதப்படுத்தும் நீதிபதியுடைய திறமையின் மீது மட்டுப்பாடுகளை மட்டுமே விதிக்கின்றது'.

   இக்கூற்றின் வலிதான தன்மையை விமரிசித்து ஆராய்க.

(பதிப்புரிமை பெற்றது)